**அனுப்புநர்**

திருமதி.க.சசிகலா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.
இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 018412 / எச் 1 / 2025** **நாள் : 19 .12.2025**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை - 6 – 2025 – 2026 - ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் – மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள் – வழங்குதல் – தொடர்பாக

**பார்வை:**
1. அரசாணை (2டி) எண்.50, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.09.08.2017.
2. அரசாணை (2டி) எண்.13, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.20.02.2018.

*****

2025 – 2026 கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்களை கணக்கிட்டு வழங்கும் முறை பற்றிய அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகின்றது. அதனை, முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும், பள்ளித் தலைமையாசிரியர், பள்ளியில் உள்ள சார்ந்த மேல்நிலைப் பாட ஆசிரியர்களுக்கும் அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகளின் நகலினை வழங்கி, ஆசிரியர்களின் கையொப்பத்தினை பெற்றிருக்க வேண்டும். ஆசிரியர்கள் அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வழங்குவதற்கான நெறிமுறைகளைப் பற்றி பள்ளியில் +2 பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்.

மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்கும் முறை, நெறிமுறைகளில் குறிப்பிட்டவாறு சரியாக பின்பற்றப்படுவதை, சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

**இணைப்பு**: மேற்குறிப்பிட்டவாறு.

**ஒம்**/-

**இயக்குநர்**

**நகல்**

1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
   மாநில திட்ட இயக்ககம், சென்னை-6.
2. உறுப்பினர் செயலர், அரசு மாதிரிப் பள்ளிகள், சென்னை-6.
3. இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், சென்னை-6.
4. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை-6.
5. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
6. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்).

<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006</u>

<u>**மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்குதல் தொடர்பான அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள்**</u>

## A. <u>அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு (தொழிற்கல்வி செய்முறை தவிர்த்து): மொத்தம் 10 மதிப்பெண்கள்</u>

### i. மாணவர்கள் வருகைப் பதிவு : அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்

வருகைப் பதிவிற்கான மதிப்பெண்கள் வகுப்பாசிரியரால் கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும்.

கல்வியாண்டில் ஆரம்ப நாள் முதல் மாணவர்கள் பள்ளிக்கு வருகை புரிந்த நாட்களின் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு வருகைப் பதிவிற்கான மதிப்பெண்களை கணக்கிட வேண்டும்.

a) 80 சதவீதத்திற்கு மேல் வருகை : 2 மதிப்பெண்கள்

b) 75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை : 1 மதிப்பெண்

**அதாவது,**

80.01% முதல் 100% வரை- 2 மதிப்பெண்கள்

75% முதல் 80% வரை- 1 மதிப்பெண்

ஒவ்வொரு மாணவருக்கும் மேற்குறிப்பிட்டவாறு கணக்கிடப்பட்ட வருகைப் பதிவிற்கான மதிப்பெண் விவரத்தினை வகுப்பாசிரியர் கீழ்க்காணும் படிவத்தில் தயாரித்து பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

| வ.எண். | பதிவெண் | மாணவர் பெயர் | வருகைப் பதிவு சதவீதம் | வருகைப் பதிவிற்கான மதிப்பெண் |
|---|---|---|---|---|
| | | | | |

(வருகைப் பதிவிற்கான மதிப்பெண்கள் அனைத்துப் பாடங்களுக்கும் பொதுவானது)

**ii. உள்நிலைத் தேர்வுகள் : அதிகபட்சம் 4 மதிப்பெண்கள்**

(சிறந்த ஏதேனும் மூன்றுதேர்வுகளின் சராசரி மதிப்பெண்ணை 4 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.)

1. ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்த பட்சம் 4 உள்நிலைத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

2. உள்நிலைத் தேர்வுகள் 40 முதல் 45 நிமிடங்கள் வரை நடைபெறும் வகையில், வகுப்பு நேரங்களிலோ அல்லது சிறப்பு வகுப்பு நேரங்களிலோ நடத்தப்பட வேண்டும்.

3. ஒவ்வொரு பாடத்திற்குமான உள்நிலைத் தேர்வுகள் சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்களால் நடத்தப்பட வேண்டும்.

4. உள்நிலைத் தேர்வுகள் நடத்தப்படும் தேதி பற்றிய விவரத்தினை மாணவர்களுக்கு குறைந்த பட்சம் இரு நாட்களுக்கு முன்பே சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர் அறிவிக்க வேண்டும்.

5. குறிப்பிட்ட ஒரு பாடத்தின்(Subject) உள்நிலைத் தேர்வுக்கும், அதே பாடத்தின் அடுத்த உள்நிலைத் தேர்விற்கும் இடையில் குறைந்த பட்சம் 10 நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும். இரு வெவ்வேறு பாடங்களுக்கு இடையில் இந்த இடைவெளி இருக்க வேண்டிய அவசியமில்லை.

6. 25 மதிப்பெண்களுக்கு உள்நிலைத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட பாட ஆசிரியராலேயே வினாத்தாள் வடிவமைக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட வேண்டும். வினாத்தாள் மற்றும் விடைத்தாட்களை கோப்பில் வைத்திருக்கவேண்டும்.

7. உள்நிலைத் தேர்வுக்கான மதிப்பெண் விவரத்தினை மாணவர்களுக்கு தெரிவித்து, விடைத்தாட்களில் அவர்களது கையொப்பத்தினை பெற வேண்டும்.

8. உயிரியல் பாடத்தில், தாவரவியல் மற்றும் விலங்கியல் ஆகிய இரு பாடங்களுக்கும் சேர்த்து குறைந்த பட்சம் நான்கு உள்நிலைத் தேர்வுகள் நடத்தப்படவேண்டும்.

9. உள்நிலைத் தேர்வுகள் தொடர்பான கீழ்க்கண்ட படிவங்கள் அடங்கிய பதிவேடு சம்பந்தப்பட்ட பாட ஆசிரியரால் பராமரிக்கப்பட வேண்டும்.

பாடம் :                                   உள்நிலைத் தேர்வு எண்:

| வ.எண். | மாணவர் பெயர் | மதிப்பெண்கள் (அதிக பட்சம் 25) |
|---|---|---|
| | | |

**உள்நிலைத் தேர்வு மதிப்பெண்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட படிவம்**

**பாடம்:**

| வ. எண். | மாணவர் பெயர் | சிறந்த உள்நிலைத் தேர்வு –I (அதிக பட்சம் 25) | சிறந்த உள்நிலைத் தேர்வு –II (அதிக பட்சம் 25) | சிறந்த உள்நிலைத் தேர்வு –III (அதிக பட்சம் 25) | சிறந்த 3 தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களின் கூடுதல் ( T) (அதிக பட்சம் 75) | மாணவர் பெற்ற மதிப்பெண் $\frac{T}{75} \times 4^{*}$ (அதிக பட்சம் 4) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

* இம்மதிப்பெண்ணை தோராயமாக கணக்கிடுதல் வேண்டும்.

**iii. ஒப்படைவு / செயல் திட்டம் / களப்பயணம் : அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்**

(மூன்றில் ஏதேனும் ஒன்று - உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்)

பாடங்களுக்கேற்றவாறு ஒப்படைவு (Assignment) அல்லது செயல் திட்டம் (Project) அல்லது களப்பயண அறிக்கை (Field Visit Report) இவற்றில் ஏதேனும் ஒன்றினை சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்கள் தேர்வு செய்து கொள்ளலாம். ஆனால், மேற்குறிப்பிட்ட மூன்றில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே ஒரு வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் ஒரே சீராக (uniformly) ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான மதிப்பெண்களை கீழ்க்காணும் படிவத்தில் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்களால் பராமரிக்கப்பட வேண்டும்.

பாடம்:

| வ.எண். | மாணவர் பெயர் | ஒப்படைவு / செயல்திட்டம்/ களப்பயணத்திற்கான மதிப்பெண் (அதிகபட்சம் 2) |
|---|---|---|
| | | |

## iv. கல்வி இணைச் செயல்பாடுகள் : அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்

அரசாணை (2டி) எண்.13, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.20.02.2018-ல் தெரிவித்துள்ளவாறு, கீழ்க்குறிப்பிட்ட 34 செயல்பாடுகளுள், குறைந்தபட்சம் ஏதேனும் மூன்று செயல்பாடுகளில் பங்கேற்றுள்ள மாணவர்களுக்கு அதிக பட்சம் 2 மதிப்பெண்கள் அகமதிப்பீடாக வழங்கப்பட வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மரம் வளர்த்தல் | 12. | சாரண சாரணியர் இயக்கம் | 23. | தொன்மை பாதுகாப்பு மன்றம் |
| 2. | இலக்கிய மன்றம் | 13. | நாட்டு நலப் பணித் திட்டம் | 24. | தகவல் தொழில் நுட்ப மன்றம் |
| 3. | கணித மன்றம் | 14. | தேசிய மாணவர் படை | 25. | நூலக மன்றம் |
| 4. | இயற்பியல் மன்றம் | 15. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் | 26. | இதழியல் மன்றம் |
| 5. | வேதியியல் மன்றம் | 16. | சுற்றுச்சூழல் மன்றம் | 27. | இசை மன்றம் |
| 6. | உயிரியல் மன்றம் | 17. | நுண்கலை மன்றம் | 28. | கவின் கலை மன்றம் |
| 7. | வணிகவியல் மன்றம் | 18. | முதலுதவி மன்றம் | 29. | செஞ்சுருள் சங்கம் |
| 8. | பொருளியல் மன்றம் | 19. | உடல் நலன் மற்றும் சுகாதார மன்றம் | 30. | வினாடி வினா மன்றம் |
| 9. | வரலாற்று மன்றம் | 20. | நுகர்வோர் மன்றம் | 31. | சாலைப் பாதுகாப்புப் படை |
| 10. | அறிவியல் மன்றம் - அறிவியல் கண்காட்சிகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட செயல்பாடுகள் | 21. | கலாச்சார மன்றம் | 32. | விளையாட்டுச் செயல்பாடுகள் |
| | | | | 33. | தொழிற்கல்வி மன்றம் |
| 11. | தேசிய பசுமைப் படை | 22. | நாடக மன்றம் | 34. | போதை எதிர்ப்பு மன்றம் |

ஒவ்வொரு மாணவருக்கும் மேற்குறிப்பிட்ட கல்வி இணைச் செயல்பாடுகளுக்காக அகமதிப்பீடாக வழங்கப்பட்ட மதிப்பெண் விவரத்தினை வகுப்பாசிரியர் கீழ்க்காணும் படிவத்தில் தயாரித்து பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

| வ. எண். | பதிவெண் | மாணவர் பெயர் | பங்கு பெற்ற செயல்பாடுகள் | | | வழங்கப்பட்ட மதிப்பெண்கள் (அதிகபட்சம் 2) |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | |
| | | | | | | |

(கல்வி இணைச் செயல்பாடுகளுக்காக வழங்கப்பட்ட மதிப்பெண்கள் அனைத்துப் பாடங்களுக்கும் பொதுவானது)

..5..

**அகமதிப்பீடு மதிப்பெண்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட படிவம்**

**(ஒவ்வொரு பாடத்திற்கும்)**

**பாடம்:**

| வ. எண் | பதிவெண் | மாணவர் பெயர் | வருகைப் பதிவு (அதிக பட்சம் 2) | உள்நிலைத் தேர்வுகள் (அதிக பட்சம் 4) | ஒப்படைவு/ செயல்திட்டம் / களப்பயணம் (அதிக பட்சம் 2) | கல்வி இணைச் செயல்பாடுகள் (அதிக பட்சம் 2) | மொத்த மதிப்பெண்கள் (அதிக பட்சம் 10) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

(மேற்குறிப்பிட்ட பதிவேடு சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியரால் பராமரிக்கப்பட்டு, தலைமையாசிரியரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.)

**அகமதிப்பீடு மதிப்பெண்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட படிவம்**

**(அனைத்துப் பாடங்களுக்கும்)**

| வ. எண் | பதிவெண் | மாணவர் பெயர் | மொழிப் பாடம் (அதிக பட்சம் 10) | ஆங்கிலப் பாடம் (அதிக பட்சம் 10) | பாடம் 3 (அதிக பட்சம் 10) | பாடம் 4 (அதிக பட்சம் 10) | பாடம் 5 (அதிக பட்சம் 10) | பாடம் 6(அதிக பட்சம் 10) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

**(மேற்குறிப்பிட்ட பதிவேடு தலைமையாசிரியரால் பராமரிக்கப்பட வேண்டும்.)**

வகுப்பாசிரியர்கள் மாணவர்களுக்கு நடத்திய உள்நிலைத் தேர்வுகளில் மாணவர்கள் எழுதிய விடைத்தாட்கள் மற்றும் ஒப்படைப்பு/ செயல்திட்டம்/ களப்பயணம் சார்பான பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை தலைமையாசிரியர் பொதுத் தேர்வு நடைபெற்று முடிந்த நாளிலிருந்து ஆறு மாதங்கள் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். நீதிமன்ற வழக்கு அல்லது தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 ஆகியவற்றின்படி ஆவணங்கள் கோரப்படும்பொழுது, பதிவேடுகள் தலைமையாசிரியரால் ஒப்படைக்கும் வகையில் அமைந்திருத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் வழங்கப்படும் பொழுது ஆசிரியர்கள் நடுநிலைமையுடன் செயல்பட வேண்டும். தலைமையாசிரியர் மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்குவதை மிகவும் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் குறித்த விவரம், அறிவிப்புப் பலகை வாயிலாக மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அகமதிப்பீட்டு மதிப்பெண்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வது குறித்த அறிவுரைகள் இவ்வியக்ககத்தால் பின்னர் தெரிவிக்கப்படும்.

## B. தொழிற்கல்வி செய்முறை பாடத்திற்கான அகமதிப்பீடு (அதிகபட்சம் 25 மதிப்பெண்கள்)

### i. மாணவர்கள் வருகைப் பதிவு : அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்

வருகைப் பதிவிற்கான மதிப்பெண்கள் வகுப்பாசிரியரால் கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும்.

கல்வியாண்டில் ஆரம்ப நாள் முதல் மாணவர்கள் பள்ளிக்கு வருகை புரிந்த நாட்களின் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு வருகைப் பதிவிற்கான மதிப்பெண்களை கணக்கிட வேண்டும்.

a) 80 சதவீதத்திற்கு மேல் வருகை : 5 மதிப்பெண்கள்

b) 75 சதவீதத்திற்கு மேல் 80 சதவீதம் வரை : 3 மதிப்பெண்கள்

**அதாவது,**

80.01% முதல் 100% வரை- 5 மதிப்பெண்கள்

75.01% முதல் 80% வரை- 3 மதிப்பெண்கள்

ஒவ்வொரு மாணவருக்கும் மேற்குறிப்பிட்டவாறு கணக்கிடப்பட்ட வருகைப் பதிவிற்கான மதிப்பெண் விவரத்தினை வகுப்பாசிரியர் கீழ்க்காணும் படிவத்தில் தயாரித்து பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

| வ.எண். | பதிவெண் | மாணவர் பெயர் | வருகைப் பதிவு சதவீதம் | வருகைப் பதிவிற்கான மதிப்பெண் |
|---|---|---|---|---|
| | | | | |

(வருகைப் பதிவிற்கான மதிப்பெண்கள் அனைத்துப் பாடங்களுக்கும் பொதுவானது)

### ii. உள்நிலைத் தேர்வுகள் : அதிகபட்சம் 10 மதிப்பெண்கள்

(சிறந்த ஏதேனும் மூன்றுதேர்வுகளின் சராசரி மதிப்பெண்ணை 10 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.)

1. ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்த பட்சம் 4 உள்நிலைத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும்.

2. உள்நிலைத் தேர்வுகள் 40 முதல் 45 நிமிடங்கள் வரை நடைபெறும் வகையில், வகுப்பு நேரங்களிலோ அல்லது சிறப்பு வகுப்பு நேரங்களிலோ நடத்தப்பட வேண்டும்.

3. ஒவ்வொரு பாடத்திற்குமான உள்நிலைத் தேர்வுகள் சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்களால் நடத்தப்பட வேண்டும்.

4. உள்நிலைத் தேர்வுகள் நடத்தப்படும் தேதி பற்றிய விவரத்தினை மாணவர்களுக்கு குறைந்த பட்சம் இரு நாட்களுக்கு முன்பே சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர் அறிவிக்க வேண்டும்.

5. குறிப்பிட்ட ஒரு பாடத்தின் (Subject) உள்நிலைத் தேர்வுக்கும், அதே பாடத்தின் அடுத்த உள்நிலைத் தேர்விற்கும் இடையில் குறைந்த பட்சம் 10 நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும். இரு வெவ்வேறு பாடங்களுக்கு இடையில் இந்த இடைவெளி இருக்க வேண்டிய அவசியமில்லை.

6. 25 மதிப்பெண்களுக்கு உள்நிலைத் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட பாட ஆசிரியராலேயே வினாத்தாள் வடிவமைக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.வினாத்தாள் மற்றும் விடைத்தாட்களை கோப்பில் வைத்திருக்கவேண்டும்.

7. உள்நிலைத் தேர்வுக்கான மதிப்பெண் விவரத்தினை மாணவர்களுக்கு தெரிவித்து, விடைத்தாட்களில் அவர்களது கையொப்பத்தினை பெற வேண்டும்.

8. உள்நிலைத் தேர்வுகள் தொடர்பான கீழ்க்கண்ட படிவங்கள் அடங்கிய பதிவேடு சம்பந்தப்பட்ட பாட ஆசிரியரால் பராமரிக்கப்பட வேண்டும்.

பாடம் : உள்நிலைத் தேர்வு எண்:

| வ.எண். | மாணவர் பெயர் | மதிப்பெண்கள் (அதிக பட்சம் 25) |
|---|---|---|
| | | |

**உள்நிலைத் தேர்வு மதிப்பெண்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட படிவம்**

**பாடம்:**

| வ. எண். | மாணவர் பெயர் | சிறந்த உள்நிலைத் தேர்வு –I (அதிக பட்சம் 25) | சிறந்த உள்நிலைத் தேர்வு –II (அதிக பட்சம் 25) | சிறந்த உள்நிலைத் தேர்வு –III (அதிக பட்சம் 25) | சிறந்த 3 தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களின் கூடுதல் (T) (அதிக பட்சம் 75) | மாணவர் பெற்ற மதிப்பெண் $\frac{}{75} \times 10$* (அதிக பட்சம் 10) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

* இம்மதிப்பெண்ணை தோராயமாக கணக்கிடுதல் வேண்டும்.

**iii.** **ஒப்படைவு / செயல் திட்டம் / களப்பயணம் : அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்**

(மூன்றில் ஏதேனும் ஒன்று - உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்)

பாடங்களுக்கேற்றவாறு ஒப்படைவு (Assignment) அல்லது செயல் திட்டம் (Project) அல்லது களப்பயண அறிக்கை (Field Visit Report) இவற்றில் ஏதேனும் ஒன்றினை சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்கள் தேர்வு செய்து கொள்ளலாம். ஆனால், மேற்குறிப்பிட்ட மூன்றில் ஏதேனும் ஒன்றினை மட்டுமே ஒரு வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் ஒரே சீராக (uniformly) ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான மதிப்பெண்கள் கீழ்க்காணும் படிவத்தில் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்களால் பராமரிக்கப்பட வேண்டும்.

பாடம்:

| **வ.எண்.** | **மாணவர் பெயர்** | **ஒப்படைவு / செயல்திட்டம்/ களப்பயணத்திற்கான மதிப்பெண் (அதிகபட்சம் 5)** |
|---|---|---|
| | | |

**iv.** **கல்வி இணைச் செயல்பாடுகள்: அதிகபட்சம் 5 மதிப்பெண்கள்**

அரசாணை (2டி) எண்.13, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.20.02.2018-ல் தெரிவித்துள்ளவாறு, கீழ்க்குறிப்பிட்ட 34 செயல்பாடுகளுள், குறைந்தபட்சம் ஏதேனும் மூன்று செயல்பாடுகளில் பங்கேற்றுள்ள மாணவர்களுக்கு அதிக பட்சம் 5 மதிப்பெண்கள் அகமதிப்பீடாக வழங்கப்பட வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மரம் வளர்த்தல் | 12. | சாரண சாரணியர் இயக்கம் | 23. | தொன்மை பாதுகாப்பு மன்றம் |
| 2. | இலக்கிய மன்றம் | 13. | நாட்டு நலப் பணித் திட்டம் | 24. | தகவல் தொழில் நுட்ப மன்றம் |
| 3. | கணித மன்றம் | 14. | தேசிய மாணவர் படை | 25. | நூலக மன்றம் |
| 4. | இயற்பியல் மன்றம் | 15. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் | 26. | இதழியல் மன்றம் |
| 5. | வேதியியல் மன்றம் | 16. | சுற்றுச்சூழல் மன்றம் | 27. | இசை மன்றம் |
| 6. | உயிரியல் மன்றம் | 17. | நுண்கலை மன்றம் | 28. | கவின் கலை மன்றம் |
| 7. | வணிகவியல் மன்றம் | 18. | முதலுதவி மன்றம் | 29. | செஞ்சுருள் சங்கம் |
| 8. | பொருளியல் மன்றம் | 19. | உடல் நலன் மற்றும் சுகாதார மன்றம் | 30. | வினாடி வினா மன்றம் |
| 9. | வரலாற்று மன்றம் | 20. | நுகர்வோர் மன்றம் | 31. | சாலைப் பாதுகாப்புப் படை |
| 10. | அறிவியல் மன்றம் - அறிவியல் கண்காட்சிகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட செயல்பாடுகள் | 21. | கலாச்சார மன்றம் | 32. | விளையாட்டுச் செயல்பாடுகள் |
| | | | | 33. | தொழிற்கல்வி மன்றம் |
| 11. | தேசிய பசுமைப் படை | 22. | நாடக மன்றம் | 33. | போதை எதிர்ப்பு மன்றம் |

ஒவ்வொரு மாணவருக்கும் மேற்குறிப்பிட்ட கல்வி இணைச் செயல்பாடுகளுக்காக அகமதிப்பீடாக வழங்கப்பட்ட மதிப்பெண் விவரத்தினை வகுப்பாசிரியர் கீழ்க்காணும் படிவத்தில் தயாரித்து பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

| வ. எண். | பதிவெண் | மாணவர் பெயர் | பங்கு பெற்ற செயல்பாடுகள் | | | வழங்கப்பட்ட மதிப்பெண்கள் (அதிகபட்சம் 5) |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | |
| | | | | | | |

(கல்வி இணைச் செயல்பாடுகளுக்காக வழங்கப்பட்ட மதிப்பெண்கள் அனைத்துப் பாடங்களுக்கும் பொதுவானது)

**அகமதிப்பீடு மதிப்பெண்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட படிவம்**

**(ஒவ்வொரு தொழிற்கல்வி செய்முறைத் தேர்வு பாடத்திற்கும்)**

பாடம்:

| வ. எண் | பதிவெண் | மாணவர் பெயர் | வருகைப் பதிவு (அதிக பட்சம் 5) | உள்நிலைத் தேர்வுகள் (அதிக பட்சம் 10) | ஒப்படைவு/ செயல்திட்டம் / களப்பயணம் (அதிக பட்சம் 5) | கல்வி இணைச் செயல்பாடுகள் (அதிக பட்சம் 5) | மொத்த மதிப்பெண்கள் (அதிக பட்சம் 25) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

(மேற்குறிப்பிட்ட பதிவேடு சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியரால் பராமரிக்கப்பட்டு, தலைமையாசிரியடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.)

**அகமதிப்பீடு மதிப்பெண்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட படிவம்**

**(தொழிற்கல்வி பாடப்பிரிவில் உள்ள அனைத்துப் பாடங்களுக்கும்)**

| வ. எண் | பதிவெண் | மாணவர் பெயர் | மொழிப் பாடம் (அதிக பட்சம் 10) | ஆங்கிலப் பாடம் (அதிக பட்சம் 10) | பாடம் 3 (அதிக பட்சம் 10) | பாடம் 4 (அதிக பட்சம் 10) | பாடம் 5 (அதிக பட்சம் 10 ) | பாடம் 6(அதிக பட்சம் 25) (தொழிற்கல்வி செய்முறை மட்டும்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

(மேற்குறிப்பிட்ட பதிவேடு தலைமையாசிரியரால் பொதுத் தேர்வு முடிந்து ஆறு மாத காலம் வரை பராமரிக்கப்பட வேண்டும்.)

வகுப்பாசிரியர்கள் மாணவர்களுக்கு நடத்திய உள்நிலைத் தேர்வுகளில் மாணவர்கள் எழுதிய விடைத்தாட்கள் மற்றும் ஒப்படைப்பு/ செயல்திட்டம்/ களப்பயணம் சார்பான பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை தலைமையாசிரியர் பொதுத் தேர்வு நடைபெற்று முடிந்த நாளிலிருந்து ஆறு மாதங்கள் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். நீதிமன்ற வழக்கு அல்லது தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 ஆகியவற்றின்படி ஆவணங்கள் கோரப்படும்பொழுது, பதிவேடுகள் தலைமையாசிரியரால் ஒப்படைக்கும் வகையில் அமைந்திருத்தல் வேண்டும்.

மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் வழங்கப்படும் பொழுது ஆசிரியர்கள் நடுநிலைமையுடன் செயல்பட வேண்டும். தலைமையாசிரியர் மாணவர்களுக்கு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண்கள் வழங்குவதை மிகவும் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும்.

மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் குறித்த விவரம் அறிவிப்பு பலகை வாயிலாக மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அகமதிப்பீட்டு மதிப்பெண்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வது குறித்த அறிவுரைகள் இவ்வியக்ககத்தால் பின்னர் தெரிவிக்கப்படும். பதிவேற்றம் செய்யப்படும் மதிப்பெண்களே இறுதியானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-

**இயக்குநர்**

**நாள்.** 19 .12.2025